AMNESTY INTERNATIONAL

# சர்வதேச பொதுமன்னிப்பு சபை

இலங்கையில் விமர்சகர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவரும் நிலையில் சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்களுக்கு பொறுப்புகூறல் இல்லாத சூழ்நிலை நீடிக்கிறது: ஐநா மனித உரிமைகள் மன்றத்தின் 22ஆவது கூட்டத்தொடரில் (25 பிப்ரவரி – 22 மார்ச் 2013) சர்வதேச பொதுமன்னிப்பு சபை சமர்ப்பிக்கின்ற எழுத்துபூர்வ அறிக்கை.

**ASA 37/004/2013**
**12 பிப்ரவரி 2013**

இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் அமைதியான வழியில் எதிர்த்துக் குரல்கொடுப்பதற்காக தொடர்ந்தும் அச்சுறுத்தல்களையும் வன்முறையையும் எதிர்கொண்டு வருகிறார்கள். நாட்டின் நீதித்துறையைப் பயன்படுத்துபவர்களிடம் இருந்து வருகின்ற அதிருப்தியைக் கூட ஏற்க முடியாத படிக்கு மாற்றுக் கருத்துகளை கொஞ்சமும் சகித்துக்கொள்ளாதவர்களாக அரசாங்கம் நடந்துகொள்கிறது. தமது பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களிலும், அரசியல் ஆதரவாளவர்களிலும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்திவைக்க அரசாங்கம் தொடர்ந்து விருப்பம் காட்டாமல் இருந்து வருவதுடன், அவர்களது மோசமான நடத்தைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறி வருகிறது. இதன் காரணமாக கருத்து சுதந்திர உரிமை மீறப்படுகின்றது, சட்டத்தின் மாட்சிமை குலைகிறது, யுத்தத்துக்கு பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பயணம் தடம் புரளுகிறது.

இலங்கையில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்துவந்த யுத்தம் 2009ல் முடிவுக்கு வந்த இறுதிக்கட்டத்தின்போது சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்கள் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புகூறல் நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசாங்கம் விரும்பம் காட்டாமல் இருந்துவருவதாலும், மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறிவருவதாலும்,

நாட்டில் குற்றவாளிகள் சட்டங்களுக்கு அஞ்சாமல் செயல்படுகின்ற ஒரு நிலை காணப்படுகிறது. ஆட்கள் எதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்படுவது, சித்ரவதை செய்யப்படுவது, பிற வகையில் மோசமாக நடத்தப்படுவது, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போவது, சட்டத்திற்கு அப்பாற்பட்டு தண்டனை நிறைவேற்றும் விதமாக கொல்லப்படுவது போன்ற சம்பவங்கள் இலங்கையில் கட்டுப்பாடின்றி நடந்துவருகின்றன. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிந்து கிட்டதட்ட நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டாலும், இப்படியான விதி மீறல்கள்  நடப்பதாகத் தொடர்ந்து தகவல்கள் வருகின்றன. இலங்கையில் மனித உரிமைகள் சம்பந்தமாக பொறுப்புகூறல் வேண்டும் என குரல்கொடுத்துவருவோரை கணிசமான பகையுணர்வுடன் இலங்கை அதிகாரிகள் கையாண்டு வருகின்றனர். குறிப்பாக இவர்கள் தங்களுடைய குறைகளை வெளியில் சொன்னாலோ, சர்வதேச சமூகத்திடம் முறையிட்டாலோ அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டியுள்ளது.

இலங்கை நீதித்துறையின் சுதந்திரம் பறிக்கப்படுவதாக குற்றம்சாட்டி அரசாங்கத்தை விமர்சித்த நீதிபதிகளும் சட்டத்தரணிகளும்கூட அக்டோபர் 2012 முதல் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த விவகாரம் கடந்த ஜனவரியில் உச்சகட்டத்தை அடைந்தது. இலங்கையின் தலைமை நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை குற்றம்சாட்டி பதவி நீக்கும் அரசாங்கத்தின் நடைமுறை நாட்டின் அரசியல் சாசனத்துக்கு முரணானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததையும் மீறி இலங்கை நாடாளுமன்றம் அவரைப் பதவிநீக்கம் செய்தது. இலங்கை நீதித்துறை சேவைகள் ஆணையத்தின் செயற்பாடுகளில் அரசாங்க தலையீடு இருப்பதாகவும், அச்சுறுத்தப்படுவதாகவும் அவ்வாணையத்தின் செயலாளரான உயர்நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ண அறிக்கை வெளியிட்டு மூன்று வாரங்களுக்குள்ளாக ஒக்டோபர் 7ஆம் தேதியன்று ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்றினால் அவர் தாக்கப்பட்டார். கைத்துப்பாக்கியைத் தடிபோல் பயன்படுத்தி தாக்கியதோடு, அவரை காருக்குள்ளிருந்து வெளியில் இழுத்து போட முயன்றிருந்தனர். தலைமை நீதியரசரின் கண்டன பதவிநீக்க நடைமுறை சம்பந்தமான வழக்கில் அடுத்த நாள் முடிவுதெரிவிக்கவிருந்த இரண்டு மேன்முறையீட்டு நீதிபதிகளுக்கு நீதிமன்றம் செல்லக்கூடாது என்று தொலைபேசியில் மிரட்டல் வந்திருந்தது. இந்த கண்டன பதவிநீக்கத்தை எதிர்த்த நாட்டின் மூத்த வழக்கறிஞர்களுக்கும் இனந்தெரியாதோரிடம் இருந்து கொலைமிரட்டல்கள் வந்திருந்தன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) இலங்கை தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறது. இந்த சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை நெடுங்காலமாக கூறிவருகிறது. கருத்து வெளிப்பாட்டு உரிமை, ஒன்றுகூடல் உரிமை போன்ற சுதந்திரங்களை ஒடுக்குவதாகவும், நிர்வாக வசதிக்காக ஆட்களைத் நெடுங்காலம் தடுத்துவைக்க அனுமதி வழங்குவதாகவும், சித்ரவதைக்கு ஆளாக நேர்ந்தவர்கள் மற்றும் மோசமாக நடத்தப்பட்டவர்கள் அவற்றை நிரூபிக்க வேண்டிய சுமையை பாதிக்கப்பட்டவர்களின் மீதே ஏற்றிவைப்பதாகவும் இந்த சட்டம் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் மீது அதிருப்தி வெளியிடுவோர் மீது அரச ஊடகங்களில் சேறு பூசும் பிரச்சாரங்களும் நடந்துவருகின்றன.[i] விமர்சகர்கள் இனந்தெரியாத ஆட்களினால் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர். இலங்கை அரசாங்கத்தின் போக்கை எதிர்ப்பவர்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்களும் கவலை தரும் அளவில் அதிகரித்து வருகின்றன. இலங்கை அரசை விமர்சித்தவர்கள் கடத்தப்பட்டும், தாக்கப்பட்டும், சுடப்பட்டும் உள்ளனர். அவர்களது வீடுகளின் மேல் கையெறி குண்டுகள் வீசப்பட்டுள்ளன.[ii] பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனவர்களிலும் கொலை செய்யப்பட்டவர்களிலும் அவர்கள் அடங்குவர். இப்படியான சம்பவங்களில் எதுவுமே பலனளிக்கும் விதமாக விசாரிக்கப்படவும் இல்லை, சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவும் இல்லை.

2012 டிசம்பரில், இலங்கையின் வடக்கிலிருந்து 50க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர். இலங்கை இராணுவத்தால் தடை விதிக்கப்பட்ட நிகழ்வான விடுதலைப் புலிகளின் நினைவு நாளாகிய மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் மாணவர்கள் கருத்து சுதந்திரம் கோரி தீபம் ஏற்றும் சடங்கு ஒன்றை செய்ய முற்பட்டபோது பாதுகாப்பு படைகள் அந்தச் சடங்கை பலவந்தமாகத் தடுத்து நிறுத்தியிருந்தனர். அந்த நேரம் கைது செய்யப்பட்ட மாணவர் தலைவர்களில் இருவர் பிப்ரவரி மாதம் மையப்பகுதி வரை குற்றச்சாட்டு ஏதும் இன்றி "புனர்வாழ்வு"க்காக தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இந்த நேரத்தில் கைது செய்யப்பட்ட நாற்பதுக்கும் அதிகமானோரை முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று குற்றம்சாட்டி பயங்கரவாத விசாரணை பிரிவு பொலிசார் தடுத்துவைத்தனர். மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கப்படும், பொறுப்புகூறல் சூழ்நிலை ஏற்படுத்தப்படும், தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்படும் என்றெல்லாம் இலங்கை வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும், அதில் எந்த அளவுக்கு முன்னேற்றம் இல்லாமல்

இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக இந்த சம்பவங்கள் அமைந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் படிப்பைனைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு (LLRC) வழங்கிய பரிந்துரைகளை ஐநா மனித உரிமைகள் மன்றம் (HRC) 22 மார்ச் 2012 அன்று 19/2 தீர்மானத்தின் மூலமாக வரவேற்றிருந்தது. "சட்டத்துக்கு அப்பாற்பட்ட கொலைகள் மற்றும் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனவர்கள் சம்பந்தமான பரவலான குற்றச்சாட்டுகள் நம்பத்தகுந்த வகையில் விசாரிக்கப்பட வேண்டும், வட இலங்கையில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்க பக்கச்சார்பற்ற தீர்வு வழிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும், ஆட்கள் தடுத்துவைக்கப்படுவது சம்பந்தமான அரசாங்கக் கொள்கைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், முன்பு சுயாதீனமாக செயல்பட்ட சிவில் அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும், பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும், அனைவரது கருத்து சுதந்திர உரிமை பாதுகாக்கப்படவும் மேம்படுத்தப்படவும் வேண்டும், சட்டத்தின் மாட்சிமையை நிலைநாட்டுகின்ற சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்."[iii] என்பனவும் இந்தப் பரிந்துரைகளில் அடங்கும். இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த "முழுமையான செயல் திட்டம்" ஒன்றை இலங்கை வகுக்க வேண்டும் என்று ஐநா வலியுறுத்தியது. படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் நிறைவு அறிக்கையில் "சர்வதேச சட்டங்கள் மோசமாக மீறப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி போதிய அளவு பேசப்படவில்லை"[iv] என்றும் அத்தீர்மானத்தில் கவலை வெளியிடப்பட்டிருந்தது. ஆகவே "சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதில்" எல் எல் ஆர் சி பரிந்துரைகளைத் தாண்டி இலங்கை செயல்பட வேண்டும் என அத்தீர்மானம் கேட்டுக்கொண்டது.[v]

"நம்பத்தகுந்த மற்றும் சுயாதீனமான"[vi] நடவடிக்கைகள் தேவை என்பதன் அவசியத்தை தீர்மானம் 19/2 வலியுறுத்தியிருந்தது. ஆனால் 2012 ஜூலையில் இலங்கை அரசு முன்வைத்த தேசிய செயல் திட்டமானது புதிதாகவும் சுயாதீனமாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என உத்திரவாதம் வழங்கவில்லை. மாறாக விதி மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்த அமைப்புகளே இது சம்பந்தமாக விசாரணை செய்யும், தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் என்று அந்த செயல்

திட்டம் கூறியிருந்தது. இலங்கை அரசின் இந்த அணுகுமுறையை சர்வதேச பொதுமன்னிப்பு சபை மீண்டும் கடுமையாக விமர்சிக்கிறது. பாதுகாப்பு அமைச்சாலும், அரச படைகளாலும் பொலிசாராலும் தங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் செய்ததாக குற்றம்சாட்டப்படும் உரிமை மீறல்களை நியாயமான முறையில் விசாரிக்க முடியாது. மூத்த தளபதிகள் மற்றும் அரசாங்க அமைச்சர்களின் உத்தரவின் கீழ் நடந்திருக்கக்கூடியவையாக அமைந்துள்ள இந்தக் குற்றங்களை இவர்களால் முறையாக விசாரிக்க முடியாது.

எல் எல் ஆர் சி பரிந்துரைகளை செயல்படுத்துவற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ள இராணுவ வாரியம் ஒன்று அண்மையில் வெளியிட்ட அறிக்கையும் இதே பிழையான வழிமுறையைத்தான் கையாண்டுள்ளது. இராணுவத்தினர் எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு புதிய இராணுவ அமைப்பை இது பிரேரித்துள்ளது. ஆனால் மனித உரிமை மீறல்களும் மனிதாபிமான சட்ட மீறல்களும் சுயாதீனமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும் என எல் எல் ஆர் சியும், ஐநா தலைமைச் செயலர் பான் கி மூனால் நியமிக்கப்பட்ட இலங்கையில் பொறுப்புகூறலுக்கான நிபுணர் குழுவும்[vii], வேறு பல சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகளும் குரல்கொடுத்துள்ளன.

நாட்டுக்குள் விமர்சகர்களின் குரல்களை ஒலிக்கச்செய்யாமல் ஒடுக்கிவருகின்ற இலங்கை அரசாங்கம், சர்வதேச அரங்கிலோ மனித உரிமைகளும் சட்டத்தின் மாட்சிமையும் பாதுகாக்கப்படும் என வெற்று வாக்குறுதிகளை வழங்கி வருகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் செய்தவர்கள் தொடர்ந்து சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருந்துவருவது, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்று வரும்போது பொறுப்புகூறல் இல்லாது இருப்பது போன்ற விஷயங்களைப் பொறுத்தவரை மேலும் இழுத்தடிப்பு நடப்பதை ஐநா அனுமதிக்கக்கூடாது. இலங்கையில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காதிருக்கும் நிலையை முடிவுக்கு கொண்டுவர இலங்கை அரசுக்கு விருப்பம் இல்லை என்று அது நிரூபித்த நிலையில், ஐநா தற்போது செயல்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய மனித உரிமை சூழ்நிலை பற்றி கண்காணிக்கவும் ஐநா மனித உரிமைகள் மன்றத்துக்கு தகவல்தரவும் என விசேட பொறிமுறை ஒன்றை மனித உரிமைகள் மன்றம் உருவாக்க வேண்டும். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது அரச படைகளும் விடுதலைப் புலிகளும் செய்ததாகத்

தெரிவிக்கப்படும் சர்வதேச சட்டங்களின் கீழான குற்றச்செயல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றும் தேவை.

மேலும், ஐநா மனித உரிமைகள் மன்றமும், ஐநா உறுப்பு நாடுகளும் இலங்கையிடம் பின்வருவனவற்றை வலியுறுத்த வேண்டும் என்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது:

படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு

- எல் எல் ஆர் சி மூலமாகவோ பிற வகையிலோ அடையாளம் காணப்பட்ட மனித உரிமை மீறல் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல் குற்றச்சாட்டுகளை உடனடியாகவும் பலனளிக்கும் வகையிலும் சுயாதீனமாகவும் விசாரணை செய்யும் நடைமுறையை ஆரம்பிக்க வேண்டும். இவ்வகையான குற்றங்களைச் செய்தவர்கள் அவர்களுடைய அந்தஸ்து எதுவாக இருந்தாலும், அரசாங்கத்தில் அவர்கள் ஆற்றுகிற பொறுப்பு எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவோ அது பற்றி பரிசீலிக்கவோ கூடாது. மீறல்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் நபர்கள் சேர்ந்திருக்கின்ற அமைப்பிடமே அக்குற்றச்சாட்டை விசாரிக்கும் பொறுப்பை வழங்கும் நிலை இருக்கக்கூடாது.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரம்

- மாற்றுக் கருத்தையும் விமர்சனங்களையும் கொண்டிருப்பவராக சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் அவ்விதமான கருத்துகளைத் தெரிவிப்பவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும், அச்சுறுத்துவதையும் இலங்கை பாதுகாப்பு படைகளும் அவர்களுடன் கூட்டு சேர்ந்து செயல்படும் அமைப்புகளும் உடனடியாக நிறுத்த வேண்டும் . செய்தித் தணிக்கை செய்வது, ஊடகங்களை மூடுவது, குறிப்பிட்ட நபர்களை இலக்குவைத்து கண்காணிப்பது வேவுபார்ப்பது போன்ற வழக்கங்களை இலங்கை அரசு நிறுத்த வேண்டும். சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை கடைப்பிடிக்கக்கூடாத இப்படியான செயல்களை அவர்கள் நிறுத்த வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள்

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், இலங்கையில் நிர்வாக வசதிக்காக ஆட்களைத் தடுத்துவைக்கும் நடைமுறையை ஒழிக்க வேண்டும்.

- அவசரகால சட்டங்களின் கீழும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களின் கீழும் கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். "புனர்வாழ்வு முகாம்கள்" என்று சொல்லப்படுகின்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். குற்றச்செயல் என அங்கீகரிக்கப்படக்கூடிய செயல் ஒன்றைச் செய்ததாக முறைப்படி குற்றம்சாட்டப்பட்டு, சுயாதீனமான, சிவில் நிர்வாகத்தால் பொதுவான வழிமுறையில் நிறுவப்பட்ட ஒரு நீதிமன்றத்தால் தடுத்துவைக்கப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இவர்கள் மீதான குற்ற வழக்குகள் தாமதமின்றியும், பொதுவான வழிமுறையில் நிறுவப்பட்ட சிவில் நீதிமன்றத்திலும் வைத்து விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட குற்றம்சாட்டப்பட்டோரின் உரிமைகள் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படக்கூடாது;
- கைதிகளை விடுதலை செய்யச் சொல்லும் அனைத்து நீதிமன்ற உத்தரவுகளும் செயல்படுத்தப்பட வேண்டும். (அடிப்படை மனித உரிமைகள் மற்றும் ஆட்கொணர்வு ரிட் மனு போன்ற வழக்குகளில் நாட்டின் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகள் உள்ளிட்ட தீர்ப்புகள் செயல்படுத்தப்பட வேண்டும்.)

பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு அல்லது விருப்பத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான கண்காணிப்பு செயற்குழு

- மனித உரிமைகள் மன்ற தீர்மானம் 19/2 வெளியான பின்னர் இலங்கை வந்து விசாரணை செய்ய அனுமதி வேண்டும் என்று பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு அல்லது விருப்பத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான கண்காணிப்பு செயற்குழு செய்திருந்த விண்ணப்பம் ஏற்கப்பட்டு அவர்களது பயணத்துக்கு தாமதமின்றி ஏற்பாடு செய்ய வேண்டும்.

---

[i] மனித உரிமைகள் மன்றத்தின் 19ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருந்த சமயத்திலும் அது முடிந்த நேரத்திலும், தீர்மானம் 19/2ஐ ஆதரித்துப் பேசிய மற்றும் ஐநாவின் மனித உரிமை வழிமுறைகளோடு ஒத்துழைக்க விரும்பிய இலங்கையின் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை அமைப்புகளின் ஊழியர்களை "தேசத் துரோகிகள்" என்று இலங்கை அரசியல்வாதிகளும், அரசு சார் ஊடகங்களும் முத்திரை குத்தின. அவர்கள் தாக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தியிருந்தனர். மனித உரிமைகள் மன்றத்தின் 22ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிப்பிப்பதற்கு முன்பாகவும் விமர்சகர்கள் எதிராக இதேபோன்றதொரு பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது.

[ii] நீதித்துறையின் சுயாதீனம் தாக்குதலுக்குள்ளாக்கப்படுவதாகக் கூறி ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக அண்மையில் கொலை மிரட்டல்களுக்கு ஆளானவர்களில் ஜே சி

வெலியமுனவும் ஒருவர். இலங்கையில் டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனல் அமைப்பின் முன்னாள் தலைவர் இவர். இவரது அமைப்பு நிதி மோசடியில் ஈடுபட்டதாக பொய்யாக குற்றம்சாட்டப்பட்டு 2010ஆம் ஆண்டு இவருக்கு எதிராக ஒரு சேறு பூசும் பிரச்சாரம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 27 செப்டம்பர் 2008 இரவு இவர் வீட்டில் இரண்டு கையெறி குண்டுகள் வீசப்பட்டிருந்தன. இந்த தாக்குதலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றாலும், மனித உரிமை சட்டத்தரணியாக செயல்படுவதற்காக தான் இலக்குவைக்கப்படுவதாக இவர் நம்புகிறார். இத்தாக்குதலை நடத்தியது யார் என்றும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

[iii] *Promoting reconciliation and accountability in Sri Lanka*, A/HRC/RES/19/2, preamble.

[iv] அதே ஆவணம்

[v] அதே ஆவணம், OP2.

[vi] அதே ஆவணம், OP1.

[vii] Report of the Secretary-General's Panel of Experts on Accountability in Sri Lanka, 31 March 2011